# ஸ்ரீ வைணவ தினசரி

1:##
வரி யிருள் அழிவழி* மனம் வரும் உணர்வொடு *
கரிகிரி மருவிய* கரியவன் அடியிணை *
பரிவொடு பரவுநல்* அடியவர் பழவுரை *
அரி அரி அரி அரி* அரி அரி அரியே. (2)

2:
வினைவகை ஒழுகிய* வெறி நிலையடையவும் *
நினைவுடை நிகழ்வெதிர்* நிலை நலமணுகிட *
மனமுரை கிரிசைகள்* மகிழ் மறை நெறிகொடு *
தனி முதல் அடியிணை* அடைபவர் தமரே.

3:
மலர்மகள் மருவிய* மறுவுடை இறையவன் *
மலரடி கருதிய* மனமுடை அடியவர் *
மலர்புனல் அமுதுடன்* வகையன அடையவும் *
மலர் மதி எமதல* என அறிபவரே.

4:
நறையுடை மலர்மகள்* நலமுற மருவிய *
இறையவன் இனிதுற* இனியவை எணுமவர் *
அறநெறி இலன் என* அணுகிலும் அணுகிலர் *
துறை அலதெனும் ஒரு* துறை படுகிலரே.

5:
ஒளிமதியென ஒரு* திருவுடன் உயர்பவன் *
நளிமதி முகநகை* நல நிலவு உகவுகள் *
தெளிபுனல் அமுதன* செழுமதி அடியவர் *
குளி முதல் கிரிசைகள்* குறைகிலர் வலவே.

6:
வருவதொரு  உறவென* வளர் இளவரசென *
மருவு நன் மகனென* வன மத கரியென *
அருவிலை மணியென* அடியவர் அடைபவர் *
அருகணை இறைவனை* அரு கணையுடனே.

7:
விரை கமழ் மலர் மகள்* மிகவுறும் இறையவன் *
குரை கழல் குறுகிய* குளிர் மதி மதியொடு *
வரை நிலையடியவர்* மறைகளின் மறையெனும் *
உரைநிரை பரவுவர்* உளம் அமுதுணவே.

8:
துதிகளும் அறிவரு* சுருதியின் இறுதியின் *
இதயம் இதென முனி* இறையவர் உரைகளும் *

மதுர மன் உதவிய* மறைகளும் அடியவர் *
விதிவகை பரவுவர்* மிகவுளம் எழவே.

9 ##
அறிவிலர் தலைமிசை* அயனடி எழுதிய *
பொறிவகை எழுவதோர்* பொறிநலம் உகவலர் *
உறுவதும் உடையதும்* இதுவென வருவது *
நறுமலர் மகள்பதி* நலமுறு நினைவே. (2)

10:##
பெருகிய நல நிலை* பெருமையின் மிகுமயல் *
உருகிய நிலை மனம்* உயர் முகிழெழும் உடல் *
சொருகிய விழிதிகழ்*சுடர்மதி புகுமிறை * *
கருகிய உருதிகழ்* கரிகிரி அரியே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: